தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 27-ல் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகளின் குறைதீர்வு கூட்டம் வரும் ஜூன் 27-ஆம் தேதி நடைபெற உள்ளது.இது குறித்து மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் ஜூன் 27-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது.ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் விவசாயப் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு, முக்கிய வேளாண் துறை மற்றும் சார்பு துறை தொடர்பான கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆடு, நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி

**மதுரை,**

திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரி சாலையிலுள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஜூன் 18-ம் தேதி ஆடு வளர்ப்புக்கும், ஜூன் 19-ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்புக்கும் இலவசப் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள கால்நடை விவசாயிகள், சுயதொழில் துவங்க ஆர்வமுள்ள இளைஞர்கள், இளம் பெண்கள் இப்பயிற்சிகளில் சேர்ந்து பயனடையலாம். ஆர்வமுடையோர் தங்களது பெயரை நேரிலோ அல்லது தொலைபேசியில், 0452-2483903 என்ற எண்ணிலோ பதிவு செய்து கொள்ள வேண்டும், என பயிற்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் பா.முருகானந்தன் தெரிவித்துள்ளார்.

## பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரிக்கை

**பல்லடம்**

பால் கொள்முதல் விலையை ரூ. 30-ஆக உயர்த்தி வழங்குமாறு தமிழக

முதல்வருக்கு கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச் சங்க காப்பாளர் எஸ்.ஆர்.ராஜகோபால் தமிழக முதல்வருக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

தற்போது நிலவி வரும் கறவை மாடுகள் விலை உயர்வு, பணியாளர்களின் சம்பளம், தீவன விலை உயர்வு, மருத்துவச் செலவு ஆகியவற்றை கணக்கிட்டால் எங்களுக்கு 4.3 சதவீதக் கொழுப்புச் சத்து, 8.2 சதவீதம் இதர சத்துகள் உள்ள பாலுக்கு தற்போது லிட்டர் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் விலையான ரூ. 22.40 எந்தவிதத்திலும் கட்டுபடியானதல்ல.

அண்டை மாநிலமான கேரளத்தில், அரசின் மில்மா கூட்டுறவு பால் சங்கங்களில் கடந்த 14.10.12 முதல் இதே தரமுள்ள பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 27.85 பைசா வழங்குகின்றனர். தமிழகத்தில் உள்ள தனியார் பால் விற்பனையாளர்களும் கூடுதல் கொள்முதல் விலையை வழங்குகின்றனர்.

தற்போது கோவை மாவட்ட ஆவினுக்கு தினமும் 2.70 லட்சம் லிட்டர் பால் வந்த நிலை மாறி, நாளொன்றுக்கு 2.20 லட்சம் லிட்டருக்கும் கீழ் குறைந்துள்ளது. எனவே, பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் 4.3 சதவீதக் கொழுப்பு, 8.2 சதவீத இதர சத்துமானம் உள்ள பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 30-ம், எருமைப் பாலுக்கு ரூ. 40-ம் என விலையை உயர்த்தி வழங்கவேண்டும்.

தற்போது கடும் வறட்சி நிலவுவதால் அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல, உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்கும் பாலுக்கு அரசு நிதியிலிருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் அரசு மானியமாக வழங்க வேண்டும்.

தரமான பால் உற்பத்திக்கு கறவை மாடுகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்க ஆவின் நிர்வாகம் போதுமான மருத்துவர்களை பணியமர்த்தவேண்டும்.

உலர் தீவனக் கொள்முதல் குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஆவின் கூட்டுறவு சங்க பால் உற்பத்தியாளர் பிரதிநிதிகளோ, ஆவின் சங்க நிர்வாகிகளோ இடம்பெறாதது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. எனவே, மாவட்ட அளவிலான குழுக்களில் சங்கப் பிரதிநிதிகளையும்

சேர்க்கவேண்டும்.

வறட்சி மிகுந்த கோவை, திருப்பூர் மாவட்டத்தில் வைக்கோலை மானிய விலையில் விநியோகம் செய்ய 8 இடங்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளன. இது மிகவும் குறைவானதாகும்.

எனவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு இடத்தை தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆவினுக்கு கோவை, திருப்பூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் வழங்கிவரும் 25 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக மானிய விலையில் வைக்கோல் வழங்கவேண்டும். மத்திய அரசின் நிதி உதவியால் வழங்கப்படும் உலர் தீவன மானியத்தை வறட்சி காலம் முடியும் வரை தொடர்ந்து வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை

**நாமக்கல்**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில் ரூ.3.50.

**கறிக்கோழி விலை**

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.77, முட்டைக் கோழி கிலோ ரூ.57.

## பண்ணைக் கோழிகளுக்கான தடுப்பூசி மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்: மத்திய இணை அமைச்சரிடம் பண்ணையாளர்கள் கோரிக்கை

**நாமக்கல்,**

கோழிப் பண்ணைகளின் சொந்த உபயோகத்துக்காக வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் தடுப்பூசி மருந்துகளுக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சரிடம் தமிழக கோழிப் பண்ணை உரிமையாளர்கள் வலியுறுத்தினர்.

மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சராகப் பொறுப்பேற்ற நிர்மலா சீதாராமன், தமிழக தொழில் அதிபர்களுடன் சென்னையில் கலந்தாலோசனை நடத்தினார். இதில் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில், அதன் தலைவர் ஆர்.நல்லதம்பி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மழை வளம் குறைந்து வருவதால் தீவன மூலப்பொருள்களின் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. தொடர்ந்து உயர்ந்து இந்த தீவன மூலப்பொருள்கள் விலையேற்றத்தால் கோழிப்பண்ணைத் தொழிலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தப் பாதிப்புகளைத் தவிர்க்க மத்திய அரசு உணவுக் கழகக் கிடங்குகளில் (எஃப்சிஐ) இருப்பிலுள்ள மனித உபயோகத்துக்கு பயன்படாத கழிவு கோதுமை, அரிசி, மக்காச்சோளம் ஆகியவற்றை கடந்த 2003-04, 2005-06ஆம் ஆண்டுகளில் வழங்கியதைப் போல தற்போதும் மானிய விலையில் கோழிப்பண்ணைகளுக்கு வழங்க வேண்டும்.

கோழித்தீவனங்கள் தயாரிக்க முக்கிய மூலப்பொருள்களாக உள்ள மக்காசோளம், சோயா, கம்பு ஆகிய தானியங்களை முன்பேர வர்த்தகத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்ய தமிழக பள்ளிகளில் வழங்கப்படுவது போல நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

மத்திய அரசு நாமக்கல் மாவட்டத்தை முட்டை ஏற்றுமதி மண்டலமாக அறிவிக்க வேண்டும். ஆண்டு முழுவதும் பொதுமக்களுக்கு சீரான விலையில் முட்டை கிடைக்கச் செய்யவும், ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளைப் பாதுகாக்கவும் நாமக்கல் மாவட்டத்தில் குளிர்பதன கிடங்கு வசதி ஏற்படுத்தித்தர வேண்டும்.

மகாராஷ்டிர மாநிலத்தில் நடைமுறையில் உள்ளது போன்று கோழிப்பண்ணைத் தொழிலை விவசாயத் தொழிலாக அங்கீகரிக்கவும், தேசிய பால் வளத் துறை வாரியம் அமைக்கப்பட்டிருப்பது போன்று கோழிப் பண்ணைத் தொழிலுக்கும் தனியாக வாரியம் அமைத்துத்தர பரிந்துரை செய்ய வேண்டும்.

கோழிப்பண்ணைத் தொழிலுக்காக வங்கியில் பெற்றுள்ள கடன்களுக்கான வட்டியை விவசாய கடன்களுக்கு இணையாக மாற்றம் செய்ய வங்கிகளுக்கு பரிந்துரைக்க வேண்டும்.

நாட்டில் எந்தவொரு மாநிலத்தில் நோய் தாக்குதல் பிரச்னைகள் ஏற்பட்டாலும் தமிழகத்தில் இருந்து முட்டைகளை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை நிலவுகிறது. எனவே, பிற மாநிலத்தில் நிலவும் பாதிப்புகளுக்கு தமிழக கோழிப் பண்ணைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக கோழிப்பண்ணைகளை தனி மண்டலமாக அறிவிக்க வேண்டும். கோழிக் கழிவிலிருந்து மீத்தேன் வாயுவை பெறுவதற்கு காஸ் மூலம் இயங்கும் ஜெனரேட்டருக்கு மத்திய அரசு மானியம் வழங்கவும், கோழி பண்ணைகளின் சொந்த தேவைக்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் கோழி தடுப்பூசி மருந்துகளுக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்கவும் வேண்டும் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கோழிப் பண்ணை உரிமையாளர்களுக்கு அரசு மானியம் வழங்க கோரிக்கை</u>**

**பெரம்பலூர்,**பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கோழிப் பண்ணையாளர்களுக்கு அரசு மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் மனு அளிக்கப்பட்டது.

இதுகுறித்து 50-க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணை உரிமையாளர்கள் அளித்த மனு விவரம்: பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைத்துறை மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 150 கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. அரசு மற்றும் நபார்டு வங்கி மூலம் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா ரூ. 8.24 லட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, பயனாளியின் பங்குத்தொகையாக ரூ. 82 ஆயிரம் இருப்பு வைத்து மீதமுள்ள ரூ. 7.42 லட்சம் கோழிப் பண்ணை உரிமையாளர்களுக்கு வங்கி மூலம் கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையோடு ரூ. 4 லட்சம் சேர்த்து ரூ. 11.42 லட்சத்தில் கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இதில், அரசு ரூ. 2,62,50 மானியமாக வழங்கியது. இந்நிலையில், இரண்டரை மாதத்துக்கு ரூ. 45,975 செலவாகிறது. உழைப்புக்கான ஊதியம் இல்லாததால் மிகவும் பாதிக்கப்பட்டு மன உளைச்சல் அடைந்துள்ளோம். இந்தப் பாதிப்பிலிருந்து மீள நபார்டு வங்கியின் மானியத் தொகையான ரூ. 2,62,50 உடனடியாக பெற்றுத்தர வேண்டும். வங்கியில் பெற்ற கடனுக்கான வட்டியை ரத்து செய்து, ஆண்டுக்கு சரியான இடைவெளியில் 6 முறை கோழிக் குஞ்சுகள் வழங்க வேண்டும். சொட்டு மருந்து, தடுப்பூசி செலவுகளை கோழி வளர்ப்பு நிறுவனமே ஏற்க வேண்டும். அரசு அறிவித்தபடி கோழி வளர்ப்புத்

தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**20இல் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம்**

**நாகர்கோவில்**

விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம், நாகர்கோவிலில் வெள்ளிக்கிழமை (ஜூன் 20) நடைபெறுகிறது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரி மாவட்டத்தில், மாதந்தோறும் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் அரங்கில் நடைபெற்று வருகிறது.

ஜூன் 2014ஆம் மாதத்துக்கான விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம், ஜூன் 20ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து மே மாதம் நடைபெற்ற கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு பதில்கள் வழங்கப்படும்.

மேலும் விவசாயிகளின் விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"கருப்புத் தங்கம்' மிளகு விலை தொடர்ந்து அதிகரிப்பு**

**குலசேகரம்**: கருப்புத் தங்கம் என வர்ணிக்கப்படும் மிளகின் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அதன் சாகுபடி பரப்பு தொடர்ந்து சரிவடைந்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நறுமணப் பொருளாகவும், அருமருந்தாகவும், உணவில் சுவைக் கூட்டும் பொருளாகவும் பயன்படுத்தப்படும் மிளகின் தாயகம் தென்னிந்தியா.

கேரளத்தில் மலபார், தலச்சேரி, கர்நாடக மாநிலத்தில் குடகு, தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் ஆகியன மிளகு பயிராகும் முக்கிய இடங்களாகும். கொல்லி மலை, சேர்வராயன் மலை பகுதிகளிலும் மிளகு அதிகம் சாகுபடியாகிறது. கேரளக் கடற்கரையோரப் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட மிளகு, உலகளவில் சமையலில் முக்கிய இடம் பிடிக்கிறது. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும்

சாப்பிடலாம் என கூறும் அளவுக்கு அதில் மருத்துவக் குணம் நிரம்பிக் கிடக்கிறது.

கருப்புத் தங்கம்: பண்டைய காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து மிளகு உலகெங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பணத்துக்குப் பதிலாக மிளகை பண்டமாற்று செய்ததால் மிளகு, கருப்புத் தங்கம் என பெயர் பெற்றுள்ளது. இந்தியாவில் விளைந்த மிளகும், இதர நறுமணப் பொருள்களும் உலக வரலாற்றின் போக்கை மாற்றியமைத்துள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே மடகாஸ்கர், சுமத்ரா, ஜாவா, இந்தோனேஷியா, மலேசியா, வியட்நாம், தாய்லாந்து, இலங்கை, சீனா போன்ற நாடுகளில் மிளகு பயிரிடப்படுகிறது. இப்போது உலக அளவில் மிளகு ஏற்றுமதியில் வியட்நாம் முதலிடம் வகிக்கிறது.

விலை அதிகரிப்பு: இந்திய மிளகு சந்தையின் தலைமையிடமாகவும், சர்வதேச மிளகு சந்தையின் தலைமையிடமாகவும் கேரள மாநிலம் கொச்சி உள்ளது. இப்போது இச் சந்தையில் இதுவரையில்லாத அளவில் மிளகின் விலை அதிகரித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை நிலவரப்படி உலர்ந்த தரம்பிரிக்கப்பட்ட மிளகின் விலை கிலோ ரூ. 691 ஆக இருந்தது.

உற்பத்தி சரிவு: மிளகின் விலை தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் மிளகு உற்பத்தியாளர்கள் அதன் பலனை முழுமையாக அனுபவிக்க முடியாமலேயே உள்ளனர்.

இது குறித்து பேச்சிப்பாறை அருகே காக்கச்சல் பகுதியைச் சேர்ந்த மிளகு விவசாயி மணிகண்டன் கூறியதாவது:

இம் மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் சுமார் 250 ஹெக்டேர் பரப்பில் மிளகு பயிரிடப்பட்டு வந்தது. மலையோரப் பகுதிகளில் வீடுகளைச் சுற்றியும், வீட்டுத் தோட்டங்களிலும் தென்னை, கமுகு அல்லது, கல்யாண முருங்கை போன்ற மரங்களில் மிளகு கொடிகளை படர்த்தி வளர்க்கப்படுகிறது. இப்போது வீட்டுத் தோட்டங்களில் மிளகு கொடிகளை வளர்ப்பது அரிதாகி வருகிறது. பெரும் தோட்டங்களிலும் மிளகுக் கொடிகள் படரும் தாங்கு மரங்களான கல்யாண முருங்கைகள் பட்டுப்போனதால் மிளகு நடவு பெருமளவில் குறைந்து வருகிறது.

இதனால் மிளகு விவசாயிகள் மாற்று முயற்சியாக சீமைக்கொன்றை, பூவரசு, சைமரூபா போன்ற மரங்களில் மிளகு கொடிகளை படர்த்தி வளர்த்து வருகிறோம்.

மிளகுக்கு இப்போது எந்த ஆண்டும் இல்லாத வகையில் அதிக விலை கிடைக்கிறது. அதே நேரம் உற்பத்தி பரப்பு குறைந்துள்ளதால் இதன் பலனை விவசாயிகள் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை.

ரப்பர் விலை தொடர்ந்து சரிந்துவரும் நிலையில் மிளகின் விலையேற்றம் ஆறுதலாக உள்ளது. எனவே மிளகு விவசாயத்தைத் தொடர்ந்து பாதுகாக்க தோட்டக்கலைத் துறை உதவ வேண்டும் என்றார் அவர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெங்காய சாகுபடியில் வெளுத்து வாங்கும் சிவில் இன்ஜினியர்



சிவில் இன்ஜினியராக இருந்து சாதிக்க முடியாததை, வெங்காய சாகுபடியில் சாதித்துள்ளார் ஆண்டிபட்டி பகுதியை சேர்ந்த வேல்ஆண்டவர். தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள பாலக்கோம்பை கிராமத்தை சேர்ந்தவர் வேல்ஆண்டவர். மதுரை தியாராஜர் இன்ஜினியரிங் கல்லூரியில் 1987ல் சிவில் இன்ஜினியரிங் முடித்தார். இவ ருடன் படித்த பலரும் படிப்புக்கேற்ற வேலை, வருவாய் தேடி வெளியூர், வெளிநாடு சென்றபோது, இவர் மட்டும் விவசாயத்தில் நாட்டம் செலுத்தினார். 20 ஆண்டுகளுக்கும் மேலாக வெங்காய சாகுபடியில் அதிக நாட்டம் செலுத்தி வரும் இவர், இதில் விவசாயிகளுக்கு நஷ்டம் வர வாய்ப்பே இல்லை, என்கிறார்.

தோட்டக்கலை, விவசாயத்துறை அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில், தனது நிலத்தில் சொட்டு நீர்ப் பாசன முறையை நடைமுறைப்படுத்தி உள்ளார். வெங்காய நடவுக்கு மட்டமான பாத்தி, உயரமான பாத்தி முறையில் எது வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம். உயர பாத்திக்கு நவீன உபகரணங்கள் தேவைப்படும். இதனால் மட்டமான பாத்தியை பலரும் தேர்வு செய்வர். உயரமான பாத்தியில் நடவு செய்தால், அடைமழை பெய்தாலும், பாத்திகளில் நீர் தேங்காமல் வடிந்து விடும். இதனால் பயிருக்கு பாதிப்பு ஏற்படாது. ஆண்டிபட்டி பகுதியில் அடை மழைக்கு வாய்ப்பு குறைவு என்பதுடன், இப்பகுதியில் வீசும் காற்று வெங்காய சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. மட்டமான பாத்தி அமைத்து, நான்கு விரல்கடை நீளவாக்கிலும், அகலம் முக்கால் அடியிலான பாத்தியின் நடுப்பகுதியில் சொட்டு நீர்ப் பாசன குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

சொட்டு நீர்ப் பாசன முறையில், உரங்களை குழாய் மூலம் அனுப்பி விடுவதால் உரச்செலவு மிச்சமாவதுடன், சீராக அனைத்து பகுதிகளுக்கும் கிடைக்கும். நடவுக்கு முன்பு நிலங்களை பண்படுத்த, ஆட்டுக்கிடை அமைப்பதுடன், இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்துகிறார். வெங்காய சாகுபடியின் சாதனை குறித்து வேல்ஆண்டவர் கூறியதாவது:

குறுகிய காலப் பயிரான வெங்காய சாகுபடிக்கு 70 நாட்கள் போதுமானது. காற்று, வெயில், மழை காலத்தை கணக்கில் கொண்டு, நடவு காலத்தை தேர்வு செய்ய வேண்டும். டிசம்பரில் நடவு செய்தால் மார்ச் மாதம் அறுவடைக்கு சாதகமாக இருக்கும். கடும் கோடையான ஏப்ரல், மே மாதத்தில் நிலத்தை ஆறவிட்டு, ஜூனில் நடவு செய்தால், செப்டம்பரில் வெங்காயம் எடுக்க சாதகமாக இருக்கும்.

வெங்காய சாகுபடியில், நிலத்தை பலமுறை உழவு செய்து, பண்படுத்துவது முக்கியம். பராமரிப்பு செலவு, நோய் தாக்கம் குறைவுதான். காய்கறி சாகுபடியில் ஆண்டு முழுவதும் அறுவடை இருக்கும். வெங்காய அறுவடைக்கு மூன்றுநாட்கள் போதும். சொட்டு நீர் பாசனத்தால் 60 சதவீதம் நீர் மிச்சமாகும்.

விவசாயிகள் பலரும் விதை வெங் காயத்திற்கு கூடுதல் செலவிடுவர். விதை வெங்காயத்திற்கான செலவை குறைக்க, தரை பன்றை முறையில் விதை வெங்காயத்தை பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். விவசாயிகள் பலரும் விதை வெங்காயத்தை கூடுதல் விலை கொடுத்து வாங்கி நஷ்டம் அடைவர். எங்களுக்கு தேவையான விதை வெங்காயத்தை எப்போதும் இருப்பில் வைத்து பராமரிப்பு செய்கிறோம்.

வெங்காய சாகுபடியில் நஷ்டம் என்கிறார்கள். திட்டமிட்டு, தொழில் நுணுக்கத்துடன் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு, எந்த பாதிப்பும் இல்லை. ஒரு ஏக்கர் நிலம் இருந்தாலும், ஒரு முறை வெங்காய சாகுபடியில் லட்சம் ரூபாய் சம்பாதிக்க முடியும்.

பாலக்கோம்பை பகுதியில் விவசாயத்திற்கு தேவையான வளமான மண், ஓரளவு நீர் இருப்பு இருந்தாலும், விவசாயத்தில் இயற்கை ஒத்துழைப்பு அவசியம். இவ்வாறு தெரிவித்தார்.

இவருடன் பேச: 89399 90000

<u>நவீன தொழில்நுட்பம்</u>



வில்வம்பழ மர சாகுபடி : சிவ தலங்களில் இலைகளை வைத்து வழிபடும் இம்மரத்தின் பயன்கள் பலவாகும். வில்வம் பழம் 31.8 சதம் மாவுச்சத்து, ரிபோப்ளேவின் 1.19 மி.கி, மருத்துவத்தன்மைக் கொண்ட மார்மெலோசின்

உள்ளது. பழத்தில் பீனால் அதிகம் உள்ளதால் துவர்ப்புத்தன்மை கொடுக்கும். வில்வம் பழத்திலிருந்து மதிப்புகூட்டின பொருட்களான ஜாம், சிரப்பு,ஸ்குவாஷ், டாப்பி, மிட்டாய் தயாரிக்கலாம். வில்வம் பழத்திலிருந்து 69 காப்புரிமை பெற்ற பொருட்கள் உள்ளன. பஞ்சுமுல், எஜேல்போலியா, தாஸ்முலாரிஸ்ட் ஆகியன விற்பனையில் உள்ளன. பழுத்த பழம் உடலுக்கு டானிக்காக செயல்பட்டு, புத்துணர்ச்சி கொடுக்கும். ரத்தம் உறைதலை துரிதப்படுத்தும். மனதிற்கும் மூளைக்கும் நல்லது. வேரிலிருந்து கசாயம் தயாரித்து சாப்பிட்டால் அடிபட்ட காயம், வீக்கம் குறையும். மரப்பட்டை நீரிழிவு நோயினை குறைக்கும். வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான நிலத்தில் நன்றாக வளரும். களர், உலர் (உப்பு மண்), சரளை மண் விவசாயத்திற்கு பயன்படாத நிலங்களிலும் வளர்க்கலாம். மண் ஆழம் 3 அடி இருக்க வேண்டும். வெப்பம் மிகுந்த, குளிர் குறைந்த மித வெப்பமண்டலம், வெப்ப மண்டலம் பகுதிகளில் வளரும். இரகங்கள் : மிர்சாப்பூரி, தரோகன் ஜீ, ராம்பூரி, காசி கோண்டா, எட்டாவா, சிவன், டியோரியா, அசமாத்தி, கமாரிரியா ஆகியன பழமை வாய்ந்த இரகங்களாகும். நவீன அதிக மகசூல் தரும் இரகங்கள் வட இந்தியாவில் பாசியாபாத், பந்த்நகர், லக்னோ இடங்களிலிருந்து வெளியிடப்பட்டுள்ளன. நரேந்திர வில்வம் - 5 - நடவு செய்த சில ஆண்டுகளில் காய்க்க ஆரம்பிக்கும். நரேந்திர வில்வம் - 7 - மரம் 5 முதல் 7 மீட்டர் உயரம் வரை அதிக பரவாமல் வளரக் கூடியது.

நரேந்திர வில்வம் - 9 - மரம் 4 முதல் 6 மீட்டர் உயரம் நன்கு படர்ந்து வளரும். பந் சிவானி - உயரமாக, வேகமாக கிளைகள் நெருக்கமாக நேராக படராமல் வளரக்கூடியது. பழம் நல்ல உருண்டையான வடிவம் கொண்டு 1.2 முதல் 2 கிலோ வரை எடை கொண்டது.

பந் ஊர்வசி - சில ஆண்டுகளிலேயே அதிக விளைச்சல் தரக்கூடியது. சிஐஎஸ்எச்பி -1 - நடுத்தர உயரம் வரை படராமல் வளரும். சிஐஎஸ்எச்பி -2 - மரம் படர்ந்து வளரும்.

கோமா யாசி - குட்டையான வளர்ந்து தொங்கும் கிளையுடையது.

நடவு கன்று : விதைகளை மரத்திலிருந்து எடுத்தவுடன் விதைத்து வேர் செடிகள் உற்பத்தி செய்து கொள்ளலாம். பேட்சி பட்டிங் முறையில் செப்டம்பர் மாதத்தில் 70 சதம் மொட்டு கட்டிய கன்றுகள் கிடைக்கும். மென்தண்டு முறையிலும் ஒட்டுக் கட்டலாம்.

நடவு : 3 அடி ஆழ அகல குழிகளை 8 மீட்டர் இடைவெளியில் எடுத்து ஜூன் - ஆகஸ்ட் மாதங்களில் நடவு செய்யலாம். குழியில் 50 கிலோ எரு, ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். 10-15 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

உரமிடுதல் : 10 ஆண்டு வயது மரத்திற்கு 50 கிலோ எரு, ஒரு கிலோ யூரியா, 1.5 கிலோ சூப்பர், 750 கிராம் பொட்டாஷ், உரங்களை ஆடி - ஆவணி மாதங்களில் மழைபொழியும் பொழுது இடவேண்டும்.

மரத்தினை வடிமைத்தல் : நடவு செய்த கன்றுகளை குச்சி கொண்டு கட்டவும். ஓர் ஆண்டுக்குப் பிறகு ஏப்ரல் - மே மாதத்தில் 3 அடி உயரத்தில் வெட்டி விட வேண்டும். வெட்டு பகுதி கீழ் இருந்து நிறைய கிளைகள் உருவாகும். அதனை 6 மாதங்கள் கழித்து 4 கிளைகளை பாதியளவு விட்டு வெட்டி விட வேண்டும். இதிலிருந்து ஒவ்வொன்றிலும் 4 கிளைகள் விட்டு வளர விட வேண்டும். மே- ஜூன் மாதங்களில் பூக்க ஆரம்பித்து பிஞ்சுகளை ஜூலை மாதத்தில் தெரிய தொடங்கும். பிஞ்சுகள் உதிர்ந்தால் என்.ஏ.ஏ.20 பிபிஎம் தெளிக்க வேண்டும். மரங்கள் 3-4 வருடங்களில் காய்க்கத் தொடங்கும். விதைக்கன்று மரங்கள் 7-8 வருடங்களாகும். 10 ஆண்டுகள் ஆன மரம் 150 முதல் 200 பழங்கள் கொடுக்கும். ஜனவரி - மார்ச் மாதங்களில் விலை அதிகம் கிடைக்கும். (தகவல் : முனவர் வ.கிருஷ்ணமூர்த்தி, முனைவர் மு.அசோகன், வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன், புதுக்கோட்டை - 622 303.போன் : 04322 - 296 077). - டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

<u>பருவத்தே பயிர் செய்</u>



வரும் ஆடிப்பட்டம் எந்தப் பயிர்களை நடப்பு ஆண்டு சாகுபடி செய்ய உள்ளோம்? என்பதை திட்டமிட்டு கன்றுகள் வெளியில் வாங்குவதா? தமது தோட்டத்தில் தயாரிப்பதா? என்ற முடிவு எடுத்து காய்கறிகளில் தக்காளி, கத்தரி, மிளகாய் சாகுபடிக்கு தமது தோட்டத்தில் பசுமைக்குடில் அமைத்து குழுவாக சேர்ந்து நல்ல நீர் வசதி உள்ள இடத்தில் குழித்தட்டுகள் மூலம் நாற்று தயாரிப்பு உத்திகள் கடைபிடிக்க வேண்டும் என டாக்டர் பா.இளங்கோவன் தெரிவித்தார். தமிழக அரசு மூலம் இலவசமாக நாற்றங்கால் காய்கறி விதைகள் மூலம் உற்பத்தி செய்திட நிலவள நீர்வள திட்டத்தின் கீழ் பெரிய கோட்டை கிராமத்தில் மாதிரி கிராம பசுமைக்குடில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் காய்கறி சாகுபடிக்கு குழுவாக பதிவு செய்து கொண்ட பல விவசாயிகள் முன்னுரிமை பெற்று இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தென்னையுடன் ஊடுபயிராக வரப்புப் பயிராக வேலிப்பயிராக உயிர்வேலி மரங்கள் நிறைய உள்ளன. அவற்றுள் குறைந்த நீர் தேவைப்படும். வறட்சியிலும் வாடாது வரவு தரும் நீண்ட கால மரப்பயிர்களை தேர்வு செய்திட திட்டம் வகுப்பது நல்லது. குறிப்பாக தென்னையின் உட்பகுதிகள் அதிக நிழல் உள்ள போது ஜாதிக்காய், கொக்கோ, மிளகு, கறிப்பலா, சிறப்பாக வரவு தருபவை. மலர்ப்பயிர்களில் வெளிச்சம் உள்ள இடத்துக்கு மல்லி, முல்லை மற்றும் கனகாம்பரம் நல்ல தேர்வாகும். மேலும் கோழிக்கொண்டை அரளி, துளசி, சாமந்தி முதலிய பயிர்கள் வறட்சியிலும் நன்கு வளரும்.

ஓரளவு நிழல் உள்ள தோப்புகளில் வாழை, மல்லிகை, கொத்தமல்லி, புதினா, நெல்லி அல்லது எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா பலன் தரும். மேலும் வளம் மிகுந்த பகுதிகளில் பைனாப்பிள், இஞ்சி, மஞ்சள், ஏலக்காய், மாங்காய் முதலியன சிறப்பான தேர்வாகும்.

நிலப்பகுதியில் பயறுவகைப் பயிர்கள், குறிப்பாக கொள்ளு, குத்து அவரை, கொத்தவரை நல்ல மண் வளம் சேர்த்து காசும் தருபவை. நீர் குறைவான பகுதிக்கு கோ-4 கொழுக்கட்டைப்புல், குதிரை மசால், வேலி மசால், அகத்தி, செடி முருங்கை தேர்வு செய்யலாம். நடப்பு ஆண்டு பெய்ய உள்ள நல்ல மழை மூலம் உயர் மகசூல் செய்ய மேலும் ஆலோசனை பெற 98420 07125 எண்ணில் டாக்டர் பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குநர், உடுமலையை தொடர்பு கொள்ளலாம்.

**புகையிலை விதையில் சமையல் எண்ணெய் தயாரிக்க அரசு முயற்சி**




**வேடசந்தூர்**: புகையிலை விதையில் இருந்து, கொழுப்பு இல்லாத, சமையல் எண்ணெய் தயாரிக்கும் முயற்சியை, தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

திண்டுக்கல், வேடசந்தூரில் புகையிலை ஆராய்ச்சி மையம் உள்ளது. இங்கு, புகையிலை சாகுபடிக்கான விதை, நாற்றுகள் வழங்கப்படுகின்றன. திண்டுக்கல், கரூர், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில், 10 ஆயிரம் எக்டேரில் புகையிலை பயிரிடப்பட்டு, மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது. புகையிலை பயன்பாடு, தமிழகம் உட்பட, சில மாநிலங்களில் தடை செய்யப்பட்டுள்ளது. இதில் இருந்து, பயன்பாடுமிக்க, மாற்று பொருளை கண்டுபிடிக்க, ஆராய்ச்சி மையத்திற்கு அரசு அறிவுறுத்தியிருந்தது. புகையிலையில், நிகோட்டின், நிகோட்டின் சல்பேட்,

சொலனிகால், சிட்ரிக் அமிலம், மாலிக் அமிலம், இலை புரதம், புகையிலை விதை எண்ணெய் போன்ற பொருட்கள் உள்ளன. இவற்றில் இருந்து, கொழுப்பு இல்லாத, சமையல் எண்ணெய் தயாரிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இது, சூரியகாந்தி எண்ணெய்க்கு ஈடானது. மக்கள் மத்தியில் இதை பிரபலப்படுத்த, அரசு முடிவு செய்துள்ளது. வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சி மையம் உள்ளிட்ட பல இடங்களில், இதற்கான ஆராய்ச்சிகள் நடக்கின்றன.இதற்காக, புகையிலை விதையை அதிகளவில் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, ஆராய்ச்சி மைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆர்வம் ! : பட்டு பூச்சிகள் வளர்ப்பில் விவசாயிகள்... : நூல் உற்பத்தி ஆலை அமைக்க வேண்டும்

**விழுப்புரம்**: பட்டு பூச்சிகள் வளர்ப் பில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்துவதால், விழுப்புரம் மாவட்டத்தில் பட்டு நூல் உற்பத்தி ஆலை அமைக்க, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தின் பாரம்பரியமிக்க ஆடையாகவும், திருமணத்தின் போது சிறப்பான இடம் பெற கூடியதாக பட்டு சேலைகள் மற்றும் பட்டு வேட்டிகள் உள்ளன. தற்போது 5 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து பட்டு சேலைகள் வாங்கும் அளவிற்கு, நடுத்தர மக்களிடம் பட்டு துணிகளின் மீது ஆர்வம் அதிகரித்துள்ளது. தற்போது பல்வேறு டிசைன்களில் பட்டு சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழகத்தில் காஞ்சிபுரம், ஆரணி பட்டு சேலைகளுக்கு மக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது.

மல்பரி செடிகள்

பட்டுசேலை உற்பத்திக்கு மூலமாக விளங்குவது பட்டு உற்பத்தியே ஆகும். குறைந்தளவாக, அரை ஏக்கர் நிலம் இருந்தாலே சிறிய அளவில் பண்ணை அமைத்து பட்டுப் பூச்சிகள் வளர்க்கலாம். சிலர் வீட்டுத் தோட்டங்களில் மல்பரி செடிகள் வளர்த்து, வீடுகளின் ஒரு பகுதியில் பண்ணை அமைத்து இத்தொழிலை சிறப்பாக செய்கின்றனர். துவக்கத்தில் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மலைப்பகுதிகள் உள்ள மாவட்டங்களில் பட்டு வளர்க்கும் தொழிலில் விவசாயிகள் ஈடுபட்டனர். மலை பகுதிகளின் கீழ் வெப்பம் குறைவாகவும், மழை அதிகளவு பெய்யும் போது, குளிர்ச்சி அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இச்சூழ்நிலை பட்டுப் புழுக்கள் வளர்க்கவும், பட்டு உற்பத்தி அதிகரிக்கவும் ஏற்றதாக உள்ளது.

குறைந்த முதலீடு

குறைந்த அளவில் முதலீடு செய்யப்படும் இத்தொழிலுக்கு, அரசின் பட்டு வளர்ச்சித் துறை மூலம் பண்ணைகள் அமைக்கவும், மல்பரி செடிகள் வளர்க்கவும், பட்டு உற்பத்திக்கான உபகரணங்கள் வாங்கவும் பல்வேறு மான்யங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் கள் ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதியில் துவக்கத்தில் பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தினர். இதனை தொடர்ந்து விவசாயத்திற்கு ஆள் பற்றாக்குறை, கூலி உயர்வு உட்பட பல காரணங்களால், தற்போது மாவட்டத்தில் பரவலாக விவசாயிகள், பட்டு வளர்க்கும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். விழுப்புரம் அருகிலுள்ள மண்டபம், நெடிமோழியனூர், கொத்தமங்கலம், அரசமங்கலம், வி.கல்லிக் குளம், ஐவேலி, மாத்தூர், செஞ்சி, அவலூர்பேட்டை அடுத்த விஜயமாநகரம் உள்ளிட்ட பகுதிகளிலும் பல விவசாயிகள், தற்போது பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆலை தேவை

சேலம், தருமபுரி, நெய்வேலி மற்றும் பெங்களூரு பகுதிகளிலிருந்து பட்டு பூச்சிகள், முட்டைகளை வாங்கி வந்து, பண்ணைகளில் வைத்து வளர்க்கின்றனர். 23-28 நாட்களுக்குள் உருவாகும் பட்டு இழைக ளின் கூடுகளை சேமித்து, மீண்டும் சேலம், தருமபுரி மற்றும் பெங்களூரு பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவு அதிகம் ஏற்படுகிறது. அரசு பட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள், விவசாயிகளுக்கு பண்ணை அமைப்பதற்கான மான்யம், மல்பரி செடிகள் மற்றும் பட்டுப்பூச்சிகள் வளர்க்க உபகரணங்களை விரைவாக வழங்க வேண்டும். மேலும் அறுவடை செய்யும் பட்டு கூடுகளை, இழைகளாக பிரித்தெடுக்கும் ஆலையை விழுப்புரம் மாவட்டத்தின் ஏதேனும் ஒரு பகுதியில் ஏற்படுத்த வேண்டும்.

## பலா விற்பனை ஜோர்

**கமுதி** : கமுதியில் நான்கு சுளை பலாப்பழம் தரத்திற்கு ஏற்ப ரூ.10 முதல் 20 வரை, கால் கிலோ பழம் ரூ.40 முதல் 50க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் கமுதி வாரச்சந்தையில், கேரளாவிலிருந்து லாரிகளில் கொண்டு வரப்படும் பலாப்பழங்கள், நேரடியாக விற்பனை செய்யப்படுகிறது. ஒரு பழம் ரூ.80 முதல் 120 வரை விற்கப்பட்டது. குறைந்த விலையில் கிடைத்ததால்,

பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்சென்றனர். சிறிதுநேரத்தில் அனைத்தும் விற்பனையாகின.

## விவசாயிகள் கவனத்திற்கு

**ராமநாதபுரம்** : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாக ஊராட்சி மன்ற கூட்டரங்கில் ஜூன் 20ம் தேதி காலை 11.30 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடக்கிறது.விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான குறைகளை தெரிவிக்கலாம்.

## பூக்கள் விலை கடும் சரிவு

**நாகர்கோவில்** : நாகர்கோவிலை அடுத்த தோவாளையில் பூமார்க்கெட் உள்ளது. இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த மார்க்கெட்டில் பூ வரத்தையொட்டியே பூக்களின் விலை இருக்கும் கடந்த வாரத்தில் ஏராளமான முகூர்த்தங்கள் இருந்ததால் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்து இருந்தது. இப்போது முகூர்த்த சீசன் குறைந்து போனதால் பூக்கள் விற்பனையும் சரிந்து விட்டது. இந்த நிலையில் மார்க்கெட்டுக்கு கடந்த சில நாட்களாக பூக்களின் வரத்து அதிகமானதால் விலை மள மளவென குறைந்து விட்டது. தோவாளை மார்ககெட்டில் இன்றைய நிலவரப்படி மல்லிப்பூ கிலோ ரூ. 100-க்கு விற்பனை செய்யப்பட்டது. சீசன் நேரத்தில் இதன் விலை கிலோ ரூ. 2000 வரை இருக்கும். பிச்சிப்பூ கிலோ ரூ.200, மஞ்சகேந்தி ரூ. 25, தோவாளை கேந்தி ரூ. 50, வாடாமல்லி ரூ. 30, கோழிப்பூ ரூ. 40, துளசி ரூ. 20, சம்பங்கி ரூ. 80, பட்டன் ரோஸ் ரூ. 80, பாக்கெட் ரோஸ் ரூ. 20-க்கு விற்பனை ஆனது. மழை குறைவாக இருப்பதால் மல்லிப்பூவரத்து அதிகமாக இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பருவமழை பொய்த்தது, அணையில் கூடுதல் தண்ணீர் திறப்பு

**நாகர்கோவில்** : குமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த படி பெய்யவில்லை. வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கன்னிப்பூ

சாகுபடிக்காக தயாரிக்கப்பட்ட நாற்றங்கால்களில் நாற்றுகள் கருக தொடங்கியுள்ளது. இதனால் பல இடங்களில் உழவுப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் பேச்சிப்பாறை அணையிலிருந்து வினாடிக்கு 485 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையிலிருந்து 253 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணையில் 21.05 கனஅடி தண்ணீர் உள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

**காஞ்சிபுரம்** : வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம், அடுத்த வாரம் 27ம் தேதி, நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு, மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த மாதத்திற்கான கூட்டம், வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்திருந்தார். ஆனால், நிர்வாக காரணங்களுக்காக, வரும், 27ம் தேதி வெள்ளிக்கிழமை, காலை 11:00 மணிக்கு, நடைபெறும் என, தற்போது அறிவிக்கப்பட்டு உள்ளது.

## விவசாயிகளுக்கு திறனாய்வு பயிற்சி

**உத்திரமேரூர்** : தமிழ்நாடு நீர் வளம், நில வளம் திட்டத்தின் கீழ், ஏரி நீரை பயன்படுத்தி பயிர் செய்யும் விவசாயிகளுக்கான திறனாய்வு பயிற்சி, உத்திரமேரூர் பொதுப்பணித்துறை வளாகத்தில் நேற்று நடந்தது. முகாமில், பருவ மழை குறைந்து வருகின்ற நிலையில், பாசனத்திற்கு, போதுமான அளவிற்கு, ஏரிகளில் தண்ணீர் தேக்க, புதிய நீர்வரத்து கால்வாய்கள் உருவாக்குதல் மற்றும் துார்ந்த கால்வாய்கள் சீரமைத்தல் குறித்து கூட்டத்தில் விளக்கப்பட்டது.மேலும், ஏரிகளில் தேங்கும் நீரை, சிக்கனமாக பயன்படுத்தி, நீர் பாசனம் செய்தல் மற்றும் இருப்பு நீருக்கு ஏற்ப மாற்று விவசாயங்களை மேற்கொள்ளுதல் போன்ற அறிவுரைகளும் இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இப்பயிற்சி கூட்டத்திற்கு, தமிழ்நாடு நீர்வளம், நிலம் வளம் திட்டத்தின் உதவி பொறியாளர் வெற்றிவேலன் தலைமை

தாங்கினார். பயிற்சி வல்லுனர்கள் சுமித்தா, சந்தோஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இதில், உத்திரமேரூர் பகுதியை சுற்றிலும் உள்ள 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் விளைபொருட்கள் வரத்து குறைந்தது

**விழுப்புரம்**: விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் மக்காசோளம் வரத்து குறைந்தது. நெல், பருத்தி, எள் உள்ளிட்ட விளைபொருட்கள் வரத்தும் படிப்படியாக குறைந்து வருகிறது.

விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் கடந்த ஒரு மாதமாக நெல், பருத்தி, எள் மற்றும் மக்காசோளம் உள்ளிட்ட விளைபொருட்கள் வரத்து அதிகரித்தது. அறுவடை சீசன் முடிவடைவதால், கடந்த ஒரு வாரமாக விளைபொருட்கள் வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. விழுப்புரம் கமிட்டியில் நேற்று முன்தினம் நெல் 1,500 மூட்டை, மக்காசோளம் 220 மூட்டை விற்பனைக்கு வந்தது. நேற்று மக்காசோளம் 40 மூட்டைகள், நெல் 760, எள் 300, பருத்தி 40 குவிண்டால், உளுந்து 35 மூட்டை, பாசிபயறு, பனி பயறு தலா ஒரு மூட்டை, கம்பு 16, ராகி 6 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. நேற்று மக்காசோளம் ஒரு மூட்டை அதிகபட்சம் 1,289 ரூபாய், குறைந்தபட்சம் 1,268 ரூபாய், நெல் 1,369-1,092, எள் 6,759-5,489, பருத்தி 5,413-5,129, உளுந்து 5,796- 5,559, பாசிபயறு, 4,396, பனி 4,396, கம்பு 1,369-1,364, ராகி 1,683-1,409 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் நெல், பருத்தி, எள், மக்காசோளம் உள்ளிட்ட விளைபொருட்கள் வரத்து குறைந்து வருகிறது.

## ஜூன் 27ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**சிவகங்கை** : சிவகங்கை, கலெக்டர் அலுவலகத்தில், ஜூன் 27 வெள்ளி அன்று காலை 10:30 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். இதில், விவசாயிகள் பங்கேற்று, விவசாயத்துறை சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம், என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**திருவள்ளூர்** : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 20ம் தேதி நடக்கிறது.

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 20ம் வெள்ளிக்கிழமை காலை, 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வுகாண உள்ளனர். எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில், கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ.48 லட்சத்திற்கு விற்பனை**

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 48 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,025 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,461க்கும், குறைந்த பட்சம், 5,900 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம் 6,369க்கும், குறைந்த

பட்சம், 5,659 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிகபட்சம், 17 ஆயிரத்து 777க்கும், குறைந்தபட்சம், 9,669 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 48 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## விதை நலம் பேணும் பயிற்சி

**விருதுநகர்** : விருதுநகர் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத்துறை சார்பில், விதை நலம் பேணும் பயிற்சி நடந்தது. விதை ஆய்வு துணை இயக்குனர் நாராயணப்பிரசாத் வரவேற்றோர். கோவை விதை ஆய்வு இணை இயக்குனர் சவுந்தரம் தலைமை வகித்தார். விதைகள் சட்டம், உத்தரவுகள், விதை விநியோக உரிமம் எடுத்தல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல், பதிவேடு பராமரிப்பு, மாதாந்திர அறிக்கை அனுப்புதல், விதைச்சான்று நடைமுறைகள் குறித்து, விதைச்சான்று உதவி இயக்குனர், விதை ஆய்வாளர்களால் தொழில் நுட்ப விளக்கம் அளிக்கப்பட்டது. விதை விற்பனையாளர்கள் 65 பேர் கலந்து கொண்டனர்.

## 9 எக்டேரில் நெல் பயிர்

**விருதுநகர்** : விருதுநகர்மாவட்டத்தில் 9 எக்டேரில் நெல், 20 எக்டேரில் சோளம் மற்றும் கம்பு உள்ளிட்டவை பயிரிடப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஏப்ரல், மே மாதத்தில், 9 எக்டேரில் நெல், 20 எக்டேரில் சோளம் மற்றும் கம்பு, 31 எக்டேரில் பயிறு வகைகள், 40 எக்டேரில் எண்ணெய் வித்துக்கள், 92 எக்டேரில் பருத்தி, 2 எக்டேரில் கரும்பு என 194 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. வத்திராயிருப்பு பகுதியில் அதிகளவில் குதிரைவாலி பயிரிடப்பட்டுள்ளன. இது விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியாக நன்கு உதவும். விவசாயத்திற்கு உகந்த வடகிழக்கு பருவமழை காலமான செப்டம்பர் முதல் அக்டோபர்வரை, அதிக ஏக்கரில் இவை பயிரிடப்படும்.

## விவசாயிகளுக்கு அழைப்பு

**அரூர்**: தமிழக அரசு கால்நடைத்துறை பராமரிப்பு மூலம் மானிய விலையில், விவசாயிகளுக்கு, கால்நடை தீவனங்களை வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில், ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய்க்கு ஒரு வாரத்துக்கு, மாடு ஒன்றுக்கு, 21 கிலோவும், ஐந்து மாட்டுக்கு, 105 கிலோ வழங்கப்படுகிறது.
ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ஐந்து மாட்டுக்கு, வைக்கோல் தீவனம் வழங்கப்படுகிறது. இந்த சலுகையை, விவசாயிகள் பெற வேண்டுமானால் சம்பந்தப்பட்ட பகுதியை சேர்ந்த, கால்நடை உதவி மருத்துவரிடம், அடையாள அட்டையில் பரிந்துரை பெற்று, அரூர் கால்நடை மருத்துவமனையில் பெற்றுக்கொள்ளலாம். இத்தகவலை, கால்நடை உதவி டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

## சாதித்த விவசாயிக்கு பாராட்டு விழா

**பட்டிவீரன்பட்டி** : அய்யம்பாளையம் ஸ்டேட் பாங்க் சார்பில் மதிப்பு கூட்டலில் சாதித்த விவசாயி மற்றும் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பாராட்டு விழா நடந்தது. நெல்லி, நாவல் சாகுபடியில் மதிப்பு கூட்டலில் சாதனை செய்த விவசாயி ஜெயக்குமாரை தேசிய வேளாண் வளர்ச்சி கழகம் பாராட்டி விருது வழங்கியது. இச்சாதனையை பாராட்டி அய்யம்பாளையம் ஸ்டேட் பாங்க் கிளை சார்பில் பாராட்டு விழா நடந்தது. கிளை மேலாளர் புகழேந்தி தலைமை வகித்தார். உதவி மேலாளர் சுதாகர் வரவேற்றார். ஓய்வு பெற்ற நீதிபதி பாண்டி சாதனை படைத்த விவசாயி ஜெயக்குமாருக்கு விருது வழங்கி பாராட்டினார். பேரூராட்சி தலைவர்கள் வைகைதுரை, பாஸ்கரன் ஆகியோர் பட்டிவீரன்பட்டி, அய்யம்பாளையம் பகுதி பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். கள அதிகாரி ராஜேஸ்வரன் நன்றி கூறினார்.

## 7,660 டன் உரங்கள்; கொண்டுவர ஏற்பாடு

**திண்டுக்கல்** : தென்மேற்கு பருவ மழை துவங்க இருப்பதால், மாவட்டத்திற்கு தேவையான 7,660 டன் உரங்களை கொண்டு வரப்படவுள்ளது. மாவட்டத்தில் யூரியா 1,880 டன், டி.ஏ.பி., 825 டன், பொட்டாஷ் 950 டன், சூப்பர் பாஸ்பேட் 650 டன், காம்ப்ளக்ஸ் 2,100 டன் என, மொத்தம் 6,005 டன் உரம் இருப்பில் உள்ளது.

தென்மேற்கு பருவ மழை துவங்க உள்ளதால், யூரியா 3,000 டன், டி.ஏ.பி., 850 டன், பொட்டாஷ் 1,000 டன், சூப்பர் பாஸ்பேட் 560 டன், காம்ப்ளக்ஸ் 2,250 டன் என, மொத்தம் 7,660 டன் உரம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.சாகுபடிக்கு தேவையான உரங்களை விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் தெரிவித்துள்ளார்.

## டெல்டா விவசாயிகளுக்கு மானியம் ரூ.33 கோடி: அமைச்சர் தகவல்

**தஞ்சாவூர்**: ""டெல்டா பகுதி விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக, 33 கோடி ரூபாய் வழங்குமாறு, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்,'' என்று அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு பஞ்சாயத்து யூனியனுகுட்பட்ட கண்ணுக்குடி பஞ்சாயத்தில், விவசாயிகள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கும் விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். கடனுதவி வழங்கி, தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் பேசியதாவது:

விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு கடனுதவி வழங்க, தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி முனைப்புடன் உள்ளது பாராட்டுக்குரியது. கடன் பெறுபவர்கள், குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பி செலுத்தினால், வங்கியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு, வட்டியின்றி பயிர்கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வட்டியின்றி கடன் வழங்குவதற்காக மட்டும் தமிழக முதல்வர் ஜெயலலிதா, 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். தஞ்சாவூர் உள்ளிட்ட

டெல்டா பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில், வேளாண் பொருட்கள் வழங்குவதற்காக, 33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்தியாவில், வறட்சி பாதிப்புகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கிய ஒரே மாநிலம் தமிழகம், ஒரே முதல்வர் ஜெயலலிதா தான். கடந்த ஆண்டு மேட்டூரில் தண்ணீர் இல்லாமல், விவசாயிகள் சிரமப்பட்ட போது, விவசாய பம்புசெட்டுகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க முதல்வர் உத்தரவிட்டார். இந்த ஆண்டும், விவசாய பணிகளுக்கு நாள்தோறும், 12 மணி நேரம் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்குமாறு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு, 100 சதவீத மானியத்தில் வேளாண் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் சார்பில், விவசாயிகள் உட்பட, 576 பயனாளிகளுக்கு, ஒரு கோடியே, மூன்று லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் தங்கமுத்து, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திருஞானம், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சுப்ரமணியன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அமுதாராணி உட்பட உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>விலை உயர்வு எதிரொலி வெங்காய ஏற்றுமதியை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை</u>**



வெங்காய விலை உயர்வு காரணமாக, அதன் ஏற்றுமதியை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**விலை உயர்வு**

ஒவ்வொரு வீட்டிலும் சமையலில் முக்கிய பங்கு வகிக்கிற வெங்காயத்தின் விலை ஏறுமுகம் காணத் தொடங்கி உள்ளது. தலைநகர் டெல்லியில் 15 தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரையில் விற்பனையானது.

இப்போது விலை இரண்டு மடங்காகி ரூ.25 முதல் ரூ.30 வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

**அதிரடி நடவடிக்கை**

வெங்காய விலை உயர்வை கட்_டுப்படுத்தும் வகையில் மத்திய அரசு நேற்று அதிரடி நடவடிக்கையில் இறங்கியது.

அந்த வகையில் ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை டன் ஒன்றுக்கு 300 டாலர் என்று (சுமார் ரூ.18 ஆயிரம்) நிர்ணயித்தது. இதற்கான அறிவிப்பை மத்திய வர்த்தகத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது.

அந்த அறிவிப்பில், “வெங்காய ஏற்றுமதியை கட்டுப்படுத்த அதற்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை 300 டாலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது” என கூறப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இந்த விலைக்கு குறைவான விலைக்கு வெங்காய ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளிக்காது.

**விலை ஏற்றத்தை தடுக்கும்**

இது தொடர்பாக நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் கேசவ் தேசிராஜூ கூறுகையில், “ இந்தியாவில் இருந்து சராசரியாக ஆண்டுக்கு 15 லட்சம் டன்

வெங்காயம் ஏற்றுமதி ஆகிறது. வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இது உள்நாட்டு சப்ளையை அதிகரிக்கும். விலை ஏற்றத்தையும் தடுக்கும்” என்றார்.

மேலும், “வெங்காய விலை ஏற்றம், அபாய மணி அடிக்கிற அளவுக்கு இல்லை. ஆனால் நாம் கவனமாக இருக்க வேண்டும். எனவேதான் அரசு உஷாராக உள்ளது” என கூறினார்.

நமது நாட்டில் ஆண்டுக்கு 1¾ கோடி டன் வெங்காயம் உற்பத்தி ஆவது குறிப்பிடத்தக்கது.

**<u>கடலூரில், பழம்–காய்கறி விற்பனை கடையில் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி ஆய்வு</u>**



கடலூர் பாரதி சாலையில் உள்ள பழம்– காய்கறி விற்பனை கடையில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிக்கு தகவல் வந்தது. அதன்பேரில் நேற்று மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி ராஜா மற்றும் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பழம்–காய்கறி விற்பனை கடைக்கு சென்று திடீரென சோதனை நடத்தினர். அப்போது அந்த கடையில் காலாவதியான நெல்லிச்சாறு, தக்காளிச்சாறு ஆகியவை விற்பனைக்காக வைக்கப்பட்டு இருந்ததை கண்டுபிடித்து, அதை பறிமுதல் செய்தனர். மேலும் சில தானிய பாக்கெட்டுகளில் உரிய முகவரி இல்லாமல் இருந்தது. இதை பார்த்த அதிகாரிகள் பாக்கெட்டுகளில் முகவரி கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று கடை உரிமையாளருக்கு அறிவுரை வழங்கினார். முன்னதாக கார்பைடு கல் வைத்து பழுக்கப்பட்ட மாம்பழங்கள்,

வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்படுகிறதா? என்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

__பாசன சங்க நிர்வாகிகள் கலந்துரையாடல்__



குமரி மாவட்ட பாசனத்துறை நிர்வாகிகள் மற்றும் இயற்கை உரம் தயாரிக்கும் அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாகர்கோவிலில் நடந்தது. கூட்டத்துக்கு குமரி மாவட்ட பாசன சங்க தலைவர் வின்ஸ் ஆன்றோ தலைமை தாங்கி பேசினார். இயற்கை உரம் தயாரிக்கும் அறக்கட்டளை ஒன்றின் நிர்வாகி விபூசன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பூமிபாதுகாப்பு சங்க தலைவர் பத்மதாஸ், பாசனசபை கூட்டமைப்பு தலைவர் புலவர் செல்லப்பா, அறக்கட்டளைகளின் நிர்வாகிகள் சீனிவாசன், சுரேஷ் பிரகாஷ், பாசனத்துறை மாவட்ட நிர்வாகிகள் அந்தோணி, குணசீலன், முருகேசபிள்ளை, கால்வாய் நிர்வாகிகள் ஜான்சன், சொர்ணப்பன், வருக்கத்தட்டு தங்கப்பன், சுப்பையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், “குமரி மாவட்டத்தில் அறக்கட்டளை சார்பில் இயற்கை உரத்தை அறிமுகப்படுத்தி, அனைத்து விவசாயிகளிடமும் கொண்டு சேர்ப்பது எனவும்,

கால்வாய்களை முறையாக தூர்வாரி அணை தண்ணீரை கடைமடை வரை கொண்டு சேர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ள பொதுப்பணித்துறை அதிகாரிகளை பாராட்டுவது, சமீபகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றும்பணியை விரைவாக மேற்கொள்ள கேட்டுக்கொள்வது'' என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஆன்லைனில் விலை ஏற்றம் நாமகிரிப்பேட்டை ஏலத்தில் மஞ்சள் விலை உயர வாய்ப்பு</u>**

**நாமகிரிப்பேட்டை, :**

நாமகிரிப்பேட்டையில் இன்று(17ம் தேதி) நடக்கும் ஏலத்தில் மஞ்சள் விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து நாமகிரிப்பேட்டையில் தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன. வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடக்கும். ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம்(ஆர்.சி.எம்.எஸ்) உட்பட 16 தனியார் மண்டிகள் உள்ளன. இந்த ஆண்டு மஞ்சள் மூட்டை விலை தி 10 ஆயிரத்தை தாண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.

அதே போல், சீசன் தொடங்கிய சில வாரங்களிலேயே, மஞ்சள் விலை படிப்படியாக உயர்ந்து தி9 ஆயிரத்தை தொட்டது. ஆனால், கடந்த மூன்று வாரங்களாக மஞ்சள் விலை மூட்டைக்கு தி500, 600 எனக்குறைந்து கடந்த வாரம் அதிகப்பட்சமாக விரலி மூட்டை தி7,100க்கு தான் விலை போனது. மூன்றே வாரத்தில் மூட்டைக்கு தி1600 குறைந்திருந்தது.

இந்நிலையில் இந்த வாரம் மஞ்சள் மூட்டை விலை உயரும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஆன்லைன் வர்த்தகத்தில் ஜூன் மாத விலையில் மூட்டைக்கு

தி200 வரை மஞ்சளுக்கு விலை உயர்ந்திருப்பதால், இன்று நடக்கும் ஏலத்திலும் இது பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே நாமகிரிப்பேட்டையில் இன்று நடக்கும் ஏலத்தில் மூட்டைக்கு தி200 லிருந்து 500 வரை கூடுதலாக விலை கிடைக்க வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>தென்னையில் ஊடுபயிராக திசுவாழை பயிரிட்டு அதிக லாபம் பெறலாம்</u>

**உடுமலை**, : தென்னையில் ஊடுபயிராக திசுவாழை பயிரிட்டு அதிக லாபம் பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.

உடுமலை வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கூறியுள்ளதாவது:

தென்னையில் ஊடுபயிராக திசுவாழை பயிரிடலாம். நீர் வசதி கொண்ட ஒரு ஏக்கர் தோப்பில் 2 ஆயிரம் வாழைக்கன்றுகள் நட்டால் 2 ஆயிரம் தார்கள் கிடைக்கும். ஒரு தார் விலை ரூ.120க்கு விற்றால் கூட ரூ.2.4 லட்சம் வருமானமாகும். இதற்கு சுமார் ரூ.95 ஆயிரம் செலவு செய்தாலும் 3 ஆண்டுகள் தொடர் வருமானம் பெறலாம். வளமையான மண் கொண்ட பகுதியை தேர்வு செய்து உரிய பராமரிப்பு யுக்திகளை கடைபிடித்து மண்வளம் பேணலாம்.

இதன்மூலம் தென்னைக்கு கூடுதலாக 5 காய்கள் பிடித்து உயர் லாபம் பெறும் வாய்ப்பும் உள்ளது. ஊடுபயிரான வாழைக்கு இடும் உரத்தை தென்னையும் எடுத்து ஒரு குலைக்கு 5 காய் வீதம் 12 குலைகளில் ஒரு ஏக்கரில்(75மரங்கள்) 4500 தேங்காய் கிடைத்து குறைந்தது ரூ.35ஆயிரம் முதல் ரூ45ஆயிரம் வரை விற்பனையாகி உபரி வருமானம் பெற உதவும். நீர் நிர்வாகம், உர நிர்வாகம் சிறப்பாக செய்ய வேண்டும். பக்க கன்றுகளை வெட்டி அப்புறப்படுத்தாமல் வளர்க்க வேண்டும். கடப்பாறை யின் மண்டைப்பகுதியால் இளம் பக்க கன்று மேல் அழுத்தி விட்டாலே போதும் கிழங்குகள் நன்கு பெருக்க உதவும்.

பக்க கன்றுகளில் ஒன்றை மட்டும் ஈட்டி இலைக்கன்றாக விட்டு அதனை அங்கேயே வளர்த்து பயன் பெறலாம்.

நல்ல கன்றுகளை தேர்வு செய்து ஒன்றரை அடி ஆழம், ஒன்றரை அடி அகலம், ஒன்றரை அடி நீளம் உள்ள குழிகளில் நன்கு மக்கிய தொழு உரம், அல்லது மண்புழு உரம் 10 கிலோ, 50 கிராம் மாலத்தியான் தூள் ஆகியவற்றை இட்டு நட வேண்டும். அசோக்பைரில்லம், பாஸ்டோ பேக்டிரியா, சூடாமோனா இடவும்.

ஒரு வாழைக்கு நாள்தோறும் 20 முதல் 25 லிட்டர் வரை தண்ணீர் சொட்டு

நீர்ப்பாசனம் மூலம் பாய்ச்ச வேண்டும். நீரில் கரையும் உரங்களை பயன்படுத்தி கரையும் உரப்பாசனம் செய்யலாம்.
உரங்களை வாழையில் இருந்து ஒன்றரை அடி தள்ளி பள்ளம் தோண்டி இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். தேவைப்படும் இடத்தில் சவுக்கு அல்லது மூங்கில் கம்புகள் பயன்படுத்தி முட்டு கொடுக்க வேண்டும். இந்த சாகுபடி முறையை பின்பற்றினால் நட்டு 4 ஆண்டுகள் வரை பலன் பெற முடியும். மேலும் விவரம் தேவைப்படுவோர் 98420-07125 என்ற செல்போனில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

## மாங்காயை தாக்கும் பூச்சியை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் வேளாண் மாணவர்கள் செயல் விளக்கம்

**புதுக்கோட்டை**, : மாங்காயை தாக்கும் மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள் புதுக் கோட்டை மாவட்டம், கம்மங் காட்டில் நேரடியாக செயல் விளக்கம் அளித்தனர்.

திருச்சி நவலூர்குட்பட்டில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் 4ம் ஆண்டு படித்து வரும் மாணவர்கள் 11 பேர் கொண்ட குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் பயிர் சாகுபடி குறித்து களப் பயிற்சி எடுத்து வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ராமசாமி, திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாண்டியராஜன், பேராசிரியர் தியாகராஜன், உதவி பேராசிரியர் குருநாதன் ஆகியோரின் தலைமையில் இக்கல்லூரியில் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் பழனி, சுப்பிரமணி, சதிஸ்குமார், சரவணன், வெங்கடேஸ்வரன், நந்தகுமார், மோகன், புருஷோத்தமன், மகாதேவன், வெங்கடேஷ், ஆனந்தன், ஆகிய 11 மாணவர்கள் புதுக்கோட்டை வட்டாரத்தில் கடந்த 5ம் தேதி முதல் முகாமிட்டுள்ளனர்.
இவர்கள் ஆகஸ்ட் 31 வரை 3 மாதம் கிராமப்புற வேளாண் பணிகள் மற்றும் அதன் அனுபவத்தையும் நேரிடையாக பார்வையிட்டு அதன் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடி பயிற்சி பெற்று வருகின்றனர். அதே வேளையில் பயிர்களை காக்கும்

வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

இதன்படி, இவர்கள் நேற்று புதுக்கோட்டை மாவட்டம், கம்மங்காட்டில் உள்ள கலியபெருமாள் மாந்தோட்டத்திற்கு சென்று மாங்காயை தாக்கும் மாவு பூச்சிகள் தாக்குவதை தடுத்தி நிறுத்துவது எப்படி என்பது குறித்து செயல் விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன், வேளாண் அலுவலர் பூபதி கண்ணன் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் உடனிருந்து மாணவர்களுக்கு தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.